Persatuan Pengguna Pulau Pinang
Consumers Association of Penang
槟城消费人协会 பினாங்கு பயனீட்டாளர் சங்கம்
10 Jalan Masjid Negeri, 11600 Pulau Pinang, Malaysia
Tel: 604-8299511 Fax: 604-8298109
email: consumerofpenang@gmail.com
Websites
Bahasa: www.pengguna.org.my
English: www.consumer.org.my
Chinese: www.cap.org.my

பத்திரிகைச் செய்தி 14.9.2020

# பணியிட இறப்புக்கள் முடிவுக்கு வருவது எப்போது?

மெலாக்கா, ஜாசினில் உள்ள செம்பனை ஆலையின் கழிவு கொதிகலனில், கொதித்துக்கொண்டிருந்த எண்ணெயில் வங்காளதேச தொழிலாளி ஒருவர் விழுந்து உயிரிழந்த சம்பவம் சொல்லொணா அதிர்ச்சியைத் தருவதாக பினாங்கு பயனீட்டாளர் சங்கத் தலைவர் தலைவர் முகைதீன் அப்துல் காதீர் கூறினார்.
சம்பந்தப்பட்ட கட்டிடத்தின் கூரையின் மீது, தீ தெளிப்பான்களுக்கான குழாய் பொருத்தும் வேலையில் ஈடுபட்டிருக்கும்பொழுது அந்தத் தொழிலாளி திடீரென கொதிகலனில் விழுந்தார். இந்த வேலையைச் செய்துகொண்டிருக்கும்பொழுது அவர் எந்த பாதுகாப்பு உபகரணங்களையும் அணிந்திருக்கவில்லை என்று முகைதீன் கூறினார்.

தொழிலாளர்கள் ஆபத்தான வேலைகளில் ஈடுபடும்பொழுது, அசம்பாவிதங்களையும் உயிரிழப்பையும் தவிர்க்கும் பொருட்டு, அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பு உபகரணங்களும் ஆடைகளும் உபயோகப்படுத்தப்பட வேண்டும் என்பதை பினாங்கு பயனீட்டாளர் சங்கம் நீண்ட காலமாக, எண்ணிலடங்கா முறை வலியுறுத்தி வந்திருக்கிறது.

வங்காளதேசத் தொழிலாளர் இறந்துபோனது ஒரு விபத்து என்றும் இது சதித்திட்டம் அல்ல என்று போலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது. ஆனால், இந்தச் சம்பவம் தொடர்பாக இன்னும் பல கேள்விகளும் நம்மிடையே எழுகின்றன. உதாரணத்திற்கு, தொழிலாளி முகமட் அப்துல் மானான் மோலாவுக்கு இந்த ஆபத்தான வேலையை மேற்கொள்வதற்குப் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டதா? இந்த வேலையைச் செய்வதற்கான நிபுணத்துவம் மற்றும் சான்றிதழ் அவருக்கு இருந்ததா? அவர் வேலையை மேற்கொண்டிருந்த நேரத்தில் அதனைக் கண்காணிப்பதற்கு அல்லது நிர்வகிப்பதற்கு யாரும் உடன் இருந்தனரா?

இது போன்ற வேலைகளுக்கென்று செயல்முறை தர அளவுகோல் (SOP) இருக்கிறதா? அப்படி இருந்தால் அது பின்பற்றப்படுகிறதா என்றும் முகைதின் கேள்வி எழுப்பினார்.

இந்தக் கேள்விகள் கேட்கப்படாத வரைக்கும், செயல்முறை தர அளவுகோல்களை (SOP) பின்பற்றாதவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்காத வரைக்கும், இது போன்ற துயரச் சம்பவங்களும் இறப்புகளும் தொடர்ந்துகொண்டேதான் இருக்கும் என்று

பினாங்கு பயனீட்டாளர் சங்கத் தலைவர் தலைவர் முகைதீன் அப்துல் காதீர் கூறினார்.

முகைதீன் அப்துல் காதீர்
தலைவர்
பினாங்கு பயனீட்டாளர் சங்கம்